
For Private Circulation only

DHAYA MINISTRIES

# ரேமா
## செய்திமடல்




மலர் 11 ஜூலை - செப்டம்பர்'2019 இதழ் 1 - 3

DHAYA MINISTRIES & CHARITABLE TRUST
T8/510, Sagar Lake View Homes, Ayodhya Bye Pass Road,
Piplani Post, Bhopal (M.P.) - 462 022
Post Box No. 01
Cell No: 09893141410, 09840517559, 08871452038
E.mail : info@dhayaministries.com, Website : www.dhayaministries.com

## ஆசிரியர் கடிதம்.......



பிரியமுள்ள வாசகர்களே! பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உங்கள் அனைவருக்கும் உண்டாவதாக!

எங்களை இம்மட்டும் நடத்தி வந்த தேவனுக்கு நன்றிச்செலுத்துகிறோம். ஊழியங்களுக்கு உறுதுணையாக இருக்கிற உங்கள் அனைவருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த மாதங்களில் நமது தேசத்தில் பல இடங்களுக்கு செல்ல தேவன் கிருபைப்பாராட்டினார். தேவன் எங்களது தேவைகளைச் சந்தித்து பிரயாணத்தில் போதுமான கிருபைகளைக் கொடுத்து, பாதுகாத்து வந்தார். கேரளா, தமிழ் நாடு, சத்திஷ்கார்ட் மற்றும் மத்திய பிரதேஷம் எல்லை பகுதிக்கு கடந்துச்செல்ல தேவன் கிருபைப்பாராட்டினார். அங்குள்ள ஒரு பகுதியில் HIV - வினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தேவனுடைய அன்பை கூற தேவன் கிருபைத் தந்தார். இந்த பிள்ளைகளின் எதிர்க்காலத்திற்காகவும், சுகத்திற்காகவும் மற்றும் அவர்களது பெற்றோரின் பரிசுத்த வாழ்விற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

அநேகர் இன்னும் பத்திரிக்கைக்குரிய சந்தா அனுப்பாமலிருக்கிறீர்கள்... ஊழியத்தேவைகளை நினைவுக்கூர்ந்து பொருளாதார மற்றும் ஜெபத்தினால் ஊழியங்களை தாங்குவீர்கள் என்றால் தேவனுடைய கிருபையினாலும் உங்களுடைய உதவியினாலும் இன்னும் அடுத்த பகுதிக்குள்ளாக கடந்த செல்ல உதவியாக இருக்கும். இத்தேவைகளை சந்திக்க முன் வாருங்கள். கல்வி ஆண்டுக்குள்ளாக கடந்துச் சென்றிருக்கிறோம். நமது அருட்பணியாளருடைய பிள்ளைகளின் படிப்பிற்கு உதவிச்செய்ய முன் வாருவீர்கள் என்றால் மிகவும் உதவியாக இருக்கும். “விதைக்கிறவனுக்கு விதையை கொடுத்து அதனை வளரச் செய்து பலுக பண்ணுகிற நமது தேவன் உங்கள் குறைவுகளையும் நிறைவாக்குவாராக” ஆமென்.

II இராஜாக்கள் 3 - ம் அதிகாரம் வசனங்கள் 16,17,18 வசனங்களில் வாசிக்கிறோம்: “இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும், மழையையும் காணமாட்டீர்கள். ...இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்” மோவாபின் மேல் யுத்தம்பண்ணும்படியாக யூதாவின் ராஜாவுடன் இணைந்து இஸ்ரவேலின் ராஜா, ஏதோமின் ராஜாவும் சென்றார்கள் அவர்கள் ஏதோம் வனாந்திரவழியாய் போனார்கள் ஆனாலும் ஏழு நாள் சுற்றித்திரிந்த போது அவர்களைப் பின் செல்லுகிற ராணுவத்திற்கும், மிருக ஜீவன்களுக்கும் தண்ணீர் இல்லாமற் போயிற்று, அப்பொழுது பயந்த இஸ்ரவேலின் ராஜா தேவன் நம்மை மோவாபியரின் கையில் ஒப்புக்கொடுக்கவா அழைத்து வந்தார் என்ற போது... அதற்கு யோசேபாத்: கர்த்தரிடத்தில் விசாரிப்போம் என்று கூறி, எலிசா பற்றிக் கேள்விப்பட்டு அவரிடம் விசாரித்த போது தேவன் எலிசாவைக் கொண்டு பேசின வாக்குகள் தான் இவைகள்: “இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும், மழையையும் காணமாட்டீர்கள்; ...இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இது கர்த்தரின் பார்வைக்கு அற்பக் காரியம் மோவாபியரையும் உங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார்” என்றார்.

இன்று தேவன் உங்கள் சத்துருக்களுக்கு மத்தியில் பந்தியை ஏற்படுத்தி, அவர்களை துரத்திப் போடுவார். தேவனுடைய வார்த்தையை ராஜாக்கள் நம்பின வண்ணமாக நீங்களும் நமபி வாய்க்கால்களை வெட்டுங்கள் எந்த அடையாளங்களும் இல்லாவிட்டாலும் உங்கள் வாய்க்கால்களை தேவன் வருகின்ற நாட்களில் நிரப்புவார். ஆமென்

**கிறிஸ்துவின் பணியில் சகோதரி**
**ஜோஸ்பின் டேனியல்**

சிறப்புச் செய்தி



# கடைசி நாட்களின் அபிஷேகம்



சகோ. ஆல்ஃப்ரட் டேனியல்

உலகம் முழுவதும் நடந்து வருகிற காரியங்களை பார்க்கும் போது கடைசி நாட்களில் வாழ்கிறோம் என்று அறிகிறோம். எங்கு பார்த்தாலும் கொடுமைகளும், கொலைகொள்ளை, கற்பழிப்பு, திருட்டு, கடத்தல், அநியாயம், அக்கிரமங்கள், தீவிரவாதத்தின் செயல்கள் பெருகி வருகின்றன. மனிதனுடைய மனித தன்மையே அழிந்துவிட்டது. மனிதனிடத்தில் சாத்தான் தென்படுகிறான்.

தேவனுடைய வார்த்தையானது வேதத்தின் மூலமாக: கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று நமக்கு ஞாபகப்படுத்துகிறது. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகப்போகப் பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயிருப்பார்கள் என்று வேதத்தின் மூலமாக நமக்கு ஞாபகப்படுத்துகிறது:.

இவை அனைத்தையும் கவனித்து பார்க்கையில் வேதாகமம் கூறின சுபாவம் காணப்படுகிறது. நாம் கடைசி நாட்களில் வந்து விட்டோம் என்று அறிகிறோம். உலக முழுவதும் நடக்கின்றவைகளை பார்க்கும் போது நாம் கடைசி நாட்களில் வாழ்கிறோம் என்று உணருகிறோம். மனிதன் மனிதனுக்கு சத்துருவாய் மாறி, பிறருடைய உணர்வுகளை மதிக்காமல் தன் சுயமே நடக்க வேண்டுமென்று எண்ணுகிறான்.

சாத்தானும் முழு பெலத்தோடு இந்த கடைசி நாட்களில் கிரியைச்செய்ய வேண்டுமென்று விரும்புகிறான். அவனுடைய நாட்கள் குறைக்கப்பட்டது என்று அவன் அறிந்து, அநேக மனிதர்களை நரக அக்கினிக்கு இழுத்து செல்ல முழு முயற்சி எடுக்கிறான். தேவன் சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் நரக அக்கினியை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். மனிதர்களுக்கு மனந்திரும்புவதற்கு சிலாக்கியத்தை அருளுகிறார். அதற்காகவே தன்னுடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்தில் அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவர்கள் அழிந்துப் போகாமல் நித்திய ஜீவனுள்ள சந்ததியாக வேண்டும். இந்த ராஜ்யத்தின் சுவிசேஷம் உலகம் எங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் (மத் 24:14).

தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் அதிக வேகமாக உலகமெங்கும் பரவி வருகிறது. இதற்காக கர்த்தர் தன் பக்தர்களையும், Media, நவீனகருவிகளையும் தினந்தோறும் உபயோகப்படுத்தி வருகிறார். ராஜ்யத்தின் சுவிசேஷம் அதிக வேகமாக பரவிக்கொண்டே வருகிறது.

தேவன் யோவேல் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தினார்: "கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்: அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள் உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன் (யோவேல் 2:28,29).

யோவேல் தீர்க்கதரிசி மூலமாக தேவன் கூறின வார்த்தை: ''மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்''. இயேசு கிறிஸ்து சிலுவையில் அரையப்பட்டு, ஐம்பது நாட்களுக்கு பின்பு சீஷர்கள் மேல் வீட்டறையில் கூடியிருக்கையில் பரிசுத்தாவியானவர் ஊற்றப்பட்டார். யோவேல் கூறின தீர்க்கதரிசனத்தின் ஆரம்பம் தொடங்கப்பட்டது என்று பேதுருவும் கூறினார்.

இந்த கடைசி நாட்களில் தீர்க்கதரிசனத்தின் ஆவி அனைவரின் மேலும் ஊற்றப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். முழு குடும்பமும் பக்தர்களும் தீர்க்கதரிசன ஆவியினால் அநேகரை ஜெயிக்க வேண்டும். இயேசுவைக் குறித்து சாட்சி உரைக்கிறவர்களிடத்தில் தீர்க்கதரிசனத்தின் ஆவி உள்ளது (வெளி 19:10). வேதாகமம் கூறுகிறது: மெய் சாட்சி அநேக உயிர்களை இரட்சிக்கிறது (நீதி 14:25). இந்த கடைசி நாட்களில் தேவன் விரும்புகிறார்: அவரை விசுவாசிக்கிறவர்கள் அவருடைய மெய் சாட்சியை கூறி அநேகரை இரட்சிக்க வேண்டும். அவரை கூறித்து சாட்சி உரைக்கிறவர்கள் மேல் தேவன் தன் ஆவியை ஊற்றுவார். அவர்கள் அநேகரை அக்கினியிலிருந்து இழுத்து விடுவார்கள் (யூதா 1:22).

சாத்தானும், சாத்தானின் தூதர்களுக்காக படைக்கப்பட்ட நரகத்தின் அக்கினியில் மனிதர்கள் செல்வது தேவன் விரும்பவில்லை. ஆகையால் இந்த கடைசி நாட்களில் தன் பக்தர்களின் குடும்பத்தின் மேல் தேவன் தன் ஆவியை ஊற்ற விரும்புகிறார். அவர்கள் அக்கினிக்கு கடந்துச் செல்கிறவர்களை இழுத்துவிடவேண்டும். ''பிள்ளைகள் மேலும், வாலிபர்கள் மேலும், முற்பிதாக்களின் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்'' என்று யோவேல் தீர்க்கதரிசி தெளிவாக கூறியுள்ளார். அவர்கள் அனைவரும் தீர்க்கதரிசனத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டு பிறர்களை அக்கினியிலிருந்து இழுத்து விட வேண்டும்.

கடைசி நாட்களின் அபிஷேகம் ஏன் அவசியம்? கடைசி நாட்களின் அபிஷேகம் பெறாத வரையிலும் பேதுரு பயந்தவனாயிருந்தான். நீ இயேசுவுடன் இருந்தாயா என்று அவனிடத்தில் கேட்ட போது அவன் மூன்று முறை 'இயேசுவை நான் அறியேன் ' என்று மறுதாலித்தான். பெந்தோகோத்தின் நாள் வந்த போது எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் அப்பொழுது பேதுரு வல்லமை பெற்று பதினொறு நபர்களுடன் எழும்பி உரைத்த சத்தமாய் ''நீங்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தீர்கள், அதற்கு நான் சாட்சி'' இந்த தைரியம் பேதுருக்கு எப்படி வந்தது? கடைசி நாட்களின் அபிஷேகத்தை பேதுரு பெற்றதினால் கிடைத்தது.




பேதுரு தன்னுடைய பிரசங்கத்தில் கூறினார்: “தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்” (அப் 2: 16 - 17). கடைசி நாட்களில் தேவன் விரும்புகிறார்: குமாரர், குமாரத்தி, வாலிபர், மூப்பர், ஊழியக்காரர், ஊழியக்காரிகள் மேல் தீர்க்கதரிசனத்தின் ஆவியை நிரப்பி உபயோகப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார். ஏனெனில், அதன் மூலமாக இரகசியமான காரியங்கள் வெளிப்பட வேண்டும். தீர்க்கதரிசிகள் இரகசியத்தை வெளிப்படுத்துவார்கள். இந்த கடைசி நாட்களில் தேவன் விரும்புகிறார்…. அவருடைய பிள்ளைகள் இரகசியத்தை வெளிப்படுத்த வேண்டும். தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே

உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (II பேதுரு 1:21).

தீர்க்கதரிசிகளை தேவன் உபயோகப்படுத்துகிறார். ஆகையால் தீர்க்கதரிசிகளின் நாவும், வாயும் எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும். அதனை அறிந்த ஏசாயா தீர்க்கதரிசி புலம்பி விண்ணப்பிக்கிறார்: ஐய்யோ நான் அதமானேன், அசுத்த உதடுகள் உள்ள மனிதன், அசுத்த உதடுகள் உள்ள மனிதர்கள் நடுவில் வாசஞ் செய்கிறேன் (ஏசா 6:5) என்றார். அந்த விண்ணப்பத்தை கேட்ட தேவன் தன் சேராபீன்கனை அனுப்பி, சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்தினிலிருந்து தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, அதினால் அவன் வாயைத் தொட்டு, இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான் (ஏசாயா 6:6,7). தீர்க்கதரிசிகளுடைய அக்கிரமம், பாவங்களும் மன்னிக்கப்படுவது அதிக அவசியம் தேவன் அப்பொழுது தான் நாவையும், உதடுகளையும் உபயோகப்படுத்த முடியும்.

அக்கிரமம் என்றால் என்ன? பாவம் என்றால் என்ன? அக்கிரமம் - தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்ட மனிதனுக்கு விரோதமாக பேசுவது அக்கிரமம். பாவம் - தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதது பாவம். பாவம் தேவனுக்கு விரோதமாகச் செய்கிறோம், அக்கிரமம் மனிதனுக்கு விரோதமாக செய்கிறோம். தீர்க்கதரிசி அக்கிரங்களும், பாவங்களும் செய்யக்கூடாது. அதற்காகவே இயேசுகிறிஸ்து உங்களை அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார் (எபேசி 2:1). இயேசு கிறிஸ்து நம்முடைய அக்கிரமம், பாவத்திற்காக அறையப்பட்டு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். அதினால் நம்முடைய அக்கிரமங்களும் பாவங்களும் மன்னிக்கப்பட்டது. கிறிஸ்து இயேசுவின் இரத்தம் நம்முடைய சகல அக்கிரங்களையும் பாவங்களையும் கழுவி சுத்திகரிக்கிறது. அதினால் நம்முடைய பாவங்களும், அக்கிரமங்களும் மன்னிக்கப்படுகிறது. ஏசாயா பாவங்களிலிருந்து, அக்கிரமத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டது போல நாமும் பாவங்கள், அக்கிரமத்திலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும்.

தீர்க்கதரிசிக்குள் தைரியம் அவசியம் இருக்க வேண்டும். வேதாகமத்தின் வசனத்தை நன்றாக அறிந்தவர்களாக இருக்க வேண்டும். தீர்க்கதரிசிகளுக்குள் வசனம் இல்லையென்றால் எப்படி கர்த்தர் அவர்களுக்குள் வசனமாகிய தீர்க்கதரிசனத்தை வைப்பார். அவர்கள் வசனத்தில் நன்றாக பயிற்சிப்பட்டவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் இரகசியத்தை வெளிப்படுத்த முடியும். வெளிப்படுத்தலின் சுவிசேஷத்தில் படிக்கிறோம், யோவானுக்கு பரலோகத்திலிருந்து பேசும் குரல் கேட்கப்பட்டது: நான் வானத்திலிருந்து பிறக்க கேட்டச்சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி: சமுத்திரத்தின் மேலும் பூமியின் மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக்கொள் என்று சொல்ல, நான் தூதனிடத்தில் போய், அந்தச்சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன், அதற்கு அவன் : நீ இதை வாங்கி புசி, இது உன் வயிற்றுக்கு கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான். நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன், என் வாய்க்கு அது தேனைப் போல மதுரமாயிருந்தது, நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று அப்பொழுது அவன் என்னை நோக்கி: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைகாரரையும், ராஜாக்களையுங் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்ல வேண்டும் (வெளி 10:8-11) என்றான்.



யோவான் அந்த புத்தகத்தை புசிக்காத வரையிலும் தீர்க்கதரிசனத்தை உரை என்று யோவானுக்கு கூறப்படவில்லை. புசித்த பிறகே தீர்க்கதரிசனம் உரை என்று உரைக்கப்பட்டது. அப்படியே நாமும் கர்த்தருடைய வார்த்தையில் பயிற்சிப்படாதவரையிலும் தீர்க்கதரிசனத்தை உரைக்க முடியாது. வார்த்தையில் நிலைத்து நிற்கும் போது பரிசுத்தாவினாவர் நம் மூலமாக தீர்க்கதரிசனத்தை உரைப்பார். அதினால் அநேக இரகசியங்களை வெளிப்படுத்துகிறவர்களாய் மாற முடியும்.

பவுல் தன் கடிதத்தில் கூறியுள்ளார்: (I கொரி 14: 1-3) நீங்கள் அந்நிய பாஷை பேசுகிறதை பார்க்கிலும் தீர்க்கதரிசனத்தை உரைக்க விரும்புகிறேன் என்று பவுல் I கொரி 14:5- ல் கூறகிறார்.

தீர்க்கதரிசனம் உரைக்கிறவர்கள் மனிதனுடைய வளர்ச்சி, உபதேசம் மற்றும் சமாதானத்திற்காகவே பேசுகிறார்கள். ஆகையால் கடைசி நாட்களில் தேவன் தீர்க்கதரிசனத்தின் அபிஷேகத்தை தர விரும்புகிறார்.

அன்பானவர்களே! கடைசி நாட்களில் நாம் வாழ்ந்து வருகிறோம். உங்கள் மூலமாக ஜனங்கள் வளர்ச்சி சமாதானம், வளர்ச்சி, ஆசீர்வாதம் பெற, தேவன் கடைசி நாட்களின் அபிஷேகத்தை உங்களில் ஊற்ற விரும்புகிறார். இந்த கடைசி நாட்களின் ஆசீர்வாதம் பெற நீங்கள் ஆயத்தமாய் இருக்கிறீர்களா? ஆம் என்றால் அபிஷேகம் பரிசுத்தாவியினால் உங்கள் மேல் ஊற்றப்படும், அதினால் தேவனுடைய சித்தம் உங்கள் மூலமாக நிறைவுப்பெறும்.


தேவனாகிய கர்த்தருடைய வார்த்தை எரேமியாவிற்கு உண்டாகி, அவர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு, இதோ என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்'' (எரே 1:9) என்றார். இன்றைக்கு கர்த்தராகிய தேவன் உங்களிடத்தில் கூறுகிறார்: “இந்த கடைசி நாட்களின் அபிஷேகம் நான் உங்களுக்கு கொடுத்திருக்கிறேன். நீங்கள் என்னுடைய தீர்க்கதரிசிகளாக வாய்களை திறந்து தீர்க்கதரிசனம் உரையுங்கள், எரேமியாவுடைய வாயில் வார்த்தை வைத்ததுப்போல உங்கள் வாயில் என் வார்த்தையை வைப்பேன் நீங்கள் தீர்க்கதரிசனம் உரையுங்கள், இந்த கடைசி நாட்களின் அபிஷேகத்தைப் பெற்று கர்த்தராகிய தேவனுக்கு சாட்சியாக அநேகரை அக்கினியிலிருந்து இழுத்து, பாதுகாத்து, கர்த்தராகிய தேவனுடைய ராஜ்யத்தின் பிள்ளைகளாய் மாற்றுங்கள். கர்த்தராகிய தேவன் உங்கள் அனைவரையும் தீர்க்கதரிசிகளாக மாற்ற உதவிச்செய்வாராக!ஆமென்.

## கடந்த இதழின் வேத வினாப்போட்டி - 43 க்கான

1. விபசாரம் - கொலோ 3:5.
2. கீழ்ப்படியாமை - கொலோ 3:6.
3. களைத்துப் போட்டு - கொலோ 3:1.
4. விட்டு விடுங்கள் - கொலோ 3:8.
5. மன்னிப்பு - கொலோ 3:13.
6. ஞானம் - கொலோ 3:16.
7. ஊழியம் - I கொலோ 3:22.
8. தீகி - கொலோ 4:7.
9. இயேசு - கொலோ 4:11.
10. லூக்கா - கொலோ 4:14.
11. மாற்கு - கொலோ 4:10.
12. ஒநேசிமு - கொலோ 4:7.
13. கட்டளை - கொலோ 2:21.
14. வஞ்சனை - கொலோ 2:4.
15. சுதந்தரம் - கொலோ 1:12.
16. தீமோத்தேயு - கொலோ 1:1.
17. சகல சிருஷ்டி - கொலோ 1:23.
18. உத்தியோகம் - கொலோ 1:26.
19. ஐசுவரியம் - கொலோ 1:27.
20. மீட்பு - கொலோ 1:14.
21. தற்சுருபம் - கொலோ 1:15.
22. அன்பு - கொலோ 3:14.
23. மறைந்திருக்கிறது - கொலோ 3:3.
24. ஸ்தோத்திரியுங்கள் - கொலோ 3:17.
25. பெற்றோர் - கொலோ 3:20.

**சந்தா விபரம்**

ஆண்டுக்கு ரூ.100/- தனிப்பிரதி ரூ.10/-



# பாக்கிய வசனங்கள்



Mrs. கமலா பால்ராஜ்

கர்த்தர் தம் பிள்ளைகளுக்கு அநேக பாக்கிய வசனங்களைத் தமது வார்த்தைகளின் மூலம் அருளியிருக்கிறார். உதாரணமாக மத்தேயு சுவிசேஷ நூலில் 5 - ம் அதிகாரத்தில் முதல் 12 வசனங்கள் பாக்கிய வசனங்ககளாகவே அமைந்துள்ளன. இயேசு இந்த உலகில் வாழ்ந்த போது எண்ணற்ற அருளுரைகளை, முக்கியமாக தம் மலைப் பிரசங்கத்தில் கூறியுள்ளார். வேதாகமம் முழுவதுமே தேடினால் அநேக பாக்கிய வசனங்கள் அல்லது ஆசீர்வாதங்களைக் காண முடியும்.

இன்றும் நாம் சில வித்தியாசமான பாக்கிய வசனங்களை ஆராய்ந்தறிந்து அவைகளை எப்படிப் பெற்றுக் கொள்ளலாம், அதற்கான வழிமுறைகள் என்ன என்பதை நிதானித்து ஆராய்ந்து அறிவோம்.

சங்கீதம் 84 - ஒரு அருமையான ஆத்துமாவை வாழ்விக்கும் சங்கீதம். தேவனுடைய வாசஸ்தலம் நம் வாழ்க்கைக்கு எத்தனை இன்பமாயிருக்கிறது? என வர்ணிக்கப்பட்டுள்ளது. அதில் சென்று தேவ பிரசன்னத்தை உணர்ந்து, அவரைத் துதித்துப் பாடிப் புகழ்வதும் எத்தனை இன்பமானது! அதினால் நாம் ஒவ்வொருவரும் என்னென்ன பாக்கியங்களை அடைகிறோம் என்றும் அழகாக எழுதப்பட்டிருக்கிறது. அதை ஒருமுறை வாசிக்கலாம். 10 - ம் வசனம் - ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரேநாள் நல்லது. 4 - ம் வசனம் - உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக் கொண்டிருப்பார்கள். 5ம் வசனம் - உம்மில் பெலன் கொள்ளுகிற மனுஷனும் தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.

இந்த வசனங்களை நம் தியானத்திற்கு எடுத்துக் கொள்வோம். கர்த்தரிடத்தில் சேருகிற அனைவரும் பெலன்கொள்ளுகிறார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களும் கழுகுகளைப் போன்று புதுப்பெலன் அடைகிறார்கள். (ஏசாயா 40:31). தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கடைப்பிடிக்கிறார்கள். - இவர்கள் பாக்கியவான்கள்.

இவைகளைப் பெறுவது எப்படி?

யோவான் 2 - ம் வசனம் காணும் போது தான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு மூப்பனாகிய யோவான் அப்போஸ்தலன் எவ்வாறு வாழ்த்துக் கூறுகிறார்? பிரியமானவனே! உன் ஆத்துமா வாழ்வது போல் நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் என்றார். இந்த பாக்கியமான வாழ்வை எவ்வாறு பெறுவது?

கிறிஸ்துவுக்குள் வாழ விரும்பும் நாம் ஆவிக்குரிய சிந்தையை உடையவர்களாயிருந்து ஆவியானவரால் நடத்தப்பட வேண்டும். அதற்கு சில ஆவிக்குரிய பயிற்சிகளை எடுக்க வேண்டும். அவரில் பெலன் கொள்வதும் அவருக்குக் காத்திருப்பதும் சுலபமான காரியங்கள் அல்லவே.

ஓட்டப் பந்தயமோ அல்லது வேறெந்தப் போட்டியிலோ முதன்மையாக வர வேண்டுமானாலும், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் போன்ற எதுவாயிருந்தாலும் பரிசு பெற விரும்புகிறவர்கள், மாதக்கணக்காகவோ, வருடக்கணக்காகவோ எத்தனையோ அப்பியாசங்கள், பயிற்சிகள் முயற்சிகள், கட்டுப்பாடுகள், தியாகங்கள் செய்து தான் வெற்றியைக் காண்கிறார்கள். அதே போல் விசுவாசிகளாகிய நாம் இந்த பாக்கியங்கள் பெறுவதற்கு அவர்களைப் போல் சில ஆவிக்குரிய பயிற்சிகளில் ஈடுபட்டு வெற்றி பெற வேண்டும். பரி. பவுல் இதற்கான வழிகளை நமக்கு முன்மாதிரியாக செய்வதும், எழுதியும்

கற்பித்துள்ளார். பழைய ஏற்பாட்டிலும் கூட இந்த பயிற்சிகளைக் கையாண்டு ஆண்டவரோடு வெற்றி நடை போட்ட மனிதனை நாம் பார்க்கலாம். அதற்கு சில படிகளை (Steps) நாம் கடைபிடிக்க வேண்டும்.

முதலாவதாக நடத்தல், ஓடுதல், போராடுதல்(மல்யுத்தம்), இந்த 4 படிகளையும் கடைப்பிடித்தால் பரிசு பெறுகிறவர்களாகவும் இயேசு கிறிஸ்துடன் நித்திய ஜீவனை வாழ்பவர்களாகவும் இருப்போம். இதற்கும் நம் தேவனுடைய கிருபை நமக்கு வேண்டும். அவரின்றி நாம் ஒன்றும் செய்யலாகாது. சிலருடைய வாழ்க்கைப் பயணத்தை ஆராய்ந்து பார்ப்போம்:

1) அவருடன் நடத்தல் :- தேவன் மனிதனோடு உறவாட விரும்புகிறார். நம் மத்தியில் வாசம் செய்ய ஆவலாயிருக்கிறார் (ஆதி 3:8). ஆதியிலே தேவன் தான் படைத்த ஆதாமுடனும் ஏவாளுடனும் ஏதேன் தோட்டத்தில் நடந்து, பேசி மகிழ்ந்திருந்தனர். பாவம் நுழைந்ததால் பரிசுத்தத்தை இழந்த இருவரும் இந்த உறவை புதுப்பிக்கத் தான் தேவனும் மனிதனும் வாஞ்சையாயிருக்கிறார்கள். பரிசுத்த வாழ்க்கை தேவை.

அதே போல், ஆதி 5:22 ல் ஏனோக்கு என்ற தேவமனுஷன் பரிசுத்த வாழ்வு வாழ்ந்து 300 வருடங்கள் தேவனோடு தினமும் நடந்து, சஞ்சரித்து வந்தனர். தேவன் அநேக இரகசியங்களை அவருடன் பகிர்ந்து, சஞ்சரித்து வந்தனர். தேவன் அநேக இரகசியங்களை அவருடன் பகிர்ந்து கொண்டுள்ளார் எனத் தெரிகிறது. முடிவில் ஏனோக்கை தேவன் உயிருடன் பரலோகத்திற்கு எடுத்துச் சென்றார். நாமும் கூட அவரோடு நடக்கும் பயிற்சியை மேற்கொண்டால் இந்த பாக்கியத்தை அடையலாம். கொலோசேயர் 2:6 பவுல் எழுதுகிறார் “ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்து கொண்டு ….’’ விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரம் செய்யுங்கள் - என்கிறார்.

இரண்டாவதாக, சத்தியத்தின்படி நடக்க வேண்டும். 3 யோவான் 3, 4 ம் வசனத்தின்படி அன்பு யாவரிடத்திலும் பாராட்டப்பட வேண்டும். மோசேயை எடுத்துக்கொண்டால், அவர் 40 நாட்கள் தேவனோடு மலையில் சஞ்சரித்தார். அவரது முகம் பார்க்கக் கூடாதபடி பிரகாசம் அடைந்தது. தேவ மகிமை அவரிடம் விளங்கிற்று. மனிதர் பார்க்கக் கூடாதவாறு அதேபோல் நோவாவும் தேவனுக்கு முன்பாக உத்தமனும் நீதிமானுமாய் நடந்து கொண்டதால் காப்பாற்றப்பட்டார் (ஆதி 6:9). இவர்கள் யாவரும் நமக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளனர்.

2) ஆவிக்குரிய பயிற்சி: ஓட்டப் பயிற்சி (எபிரேயர் 12:1) ல் ஆக்கியோன் அழகாக எழுதுகிறார். ‘‘பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தையும் துவக்கிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். முதலாவது, நமது பாவ பழக்கங்களைவிட்டு ஒழிக்க வேண்டும். இரண்டாவது மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட வேண்டும். மூன்றாவதாக விசுவாசத்தை துவக்கிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி ஒரே (track) நேர் பாதையில் ஓடவேண்டும். அங்கே முடிவு line - ல் இயேசு கிறிஸ்து நமக்கு வெற்றிக்கிரீடம் கொடுக்கக்காத்து நிற்பார்.

3) ஆவிக்குரிய போராட்டம் : I பேதுரு 5:8 நமது ஒரே எதிரி சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம் போல வஞ்சிக்க சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான். எவரெஸ்ட் சிகரம் போன்ற உயரமான மலைச் சிகரங்களில் ஏறி வெற்றி பெற மிகவும் போராட வேண்டும். உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகளை எதிர்த்துப் போராட வேண்டும். சில சமயம் பனிக்கட்டி உருகி சரிந்து விழுந்தால் அவ்வளவு தான், பரலோகம் தான் போக வேண்டும். இங்கேயும் இந்த வானமண்டலத்து அந்தகார லோகாதிபதிகளுடன் நாம் போராட சாதாரண ஆயுதங்கள் ஒன்றுக்கும் உதவாது. எபேசியர் 5:7-12 வரை யிலுள்ள ஆவிக்குரிய ஆயுதங்களை அணிந்து மட்டுமே ஜெயம் பெற முடியும். சர்வாயுத வர்க்கத்தை அணிந்தால்தான் வெற்றி பெற முடியும். இதற்கெல்லாம் விசுவாச பயிற்சி மிக அவசியம். இயேசு

கிறிஸ்துவின் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய வேத வசனமே நமக்கு ஜெயத்தைக் கொடுக்கும். ஆகவே பிசாசை ஜெயிக்க இயேசு கிறிஸ்துவின் வசனங்களை எந்த நேரமும் உச்சரித்து பயிற்சி பெறுவது அவசியம். அவர்களது பெலன் வசனத்தில் உள்ளது.

'எலிமா' வாலிபப் பெண் ஒரு நல்ல பாம்பை வளர்த்து வந்தாள். அவள் நன்றாக நடனமாடக் கூடியவள். பாம்பானது அந்த இசையில் மயங்கி அவளது உடலைச் சுற்றிக் கொள்ள அவளும் ஆடுவாள். ஆனால் அந்தோ ஒரு நாள் அது அவளைக் கொத்திவிட்டது. அப்படியே இறந்து விழுந்தாள். இதேபோல் நாம் பாவத்துடனும் சாத்தானுடம் விளையாடக்கூடாது. பாவம் வாசற்படியில் படுத்திருக்குமென வேதம் கூறுகிறது. எத்தனை ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமோ? வேதவசனமே நமது போர் ஆயுதம்.

4) தோட்டத்தில் (உலகத்தில்) விதை சுவிசேஷமாகிய வேத வசனத்தை எச்சரிப்புடன் நல்ல நிலம் பார்த்து விதைக்க வேண்டும். வளரச்செய்வதும் ஆத்தும அறுவடை செய்வதும் தேவனுடைய வேலை. ஆத்துமாக்களை இரட்சிப்பது கத்தருடைய சித்தம். இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் மேலே சொன்ன மூன்று படிகளையும் தாண்டி வந்தால் இயேசுவின் நற்செய்தியைப் பரப்புபவர்களாக பணி செய்ய அழைக்கப் பட்டிருக்கிறோம். ஒவ்வொருவருடைய கடமையுமாகும். இதிலே தேவனுடைய மகிமை விளங்கும். நாம் தேவனால் அங்கீகரிக்கப்படுபவர் களாயிருப்போம். தேவ ராஜ்யத்தை இப்பூலோகத்தில் ஸ்தாபிக்கப்படுபவர்களாய் இருப்போம். தேவ ராஜ்யத்தை இப்பூலோகத்தில் ஸ்தாபிக்கும் பங்கு நமக்குண்டு, பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபையாருக்கு எழுதும் போது, I கொரிந்தியர் 3:6 பவுல் விதை விதைத்தால், அப்பொல்லோ தண்ணீர் பாய்ச்சிவான், வளரச்செய்ததோ தேவன் என விளக்கம் கூறி யாரும் இரட்சிப்பின் மேன்மையைப் பெற்றுக் கொள்ள முடியாது. தேவன் ஒருவரே வளச் செகிறவர், மனமாற்றத்தைக் கொடுப்பவர். நற்செய்திப் பணியாளரின் பணி இது கூடாத காரியம். வழியருக்கேயும். கற்பாறை நிலத்திலும் விதைத்தால் அது வீண் போகும்.



இப்பூலோகத்தில் இரண்டுவித நற்செய்தியாளர் தேவ மகிமையை வெளிப்படுத்துகின்றனர். 1) உலக மக்கள் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு இயேசுவின் அன்பை ருசித்து, அவர் கிருபையில் பெருகிற விசுவாச மார்க்கத்தார் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் சமாதானமாய் வாழுகிறார்கள். தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும் என்ற வாஞ்சையுடையவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். சமயம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இயேசுவின் அன்பையும் நற்செய்தியையும் மற்றவரிடம் கூறி அவர்களையும் ஒரே மந்தைக்குள் சேர்க்கவும் அதன் மூலம் தேவ மகிமையடையவும் பிரயாசப்படுவார்கள். இந்தப் பணிக்காகவே இயேசுவின் ராஜ்யத்தை இவ்வுலகில் ஸ்தாபிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுக்கிற தாலந்துகள், கிருபை இவைகளின் அடிப்படையில் தேவன் நம் உழைப்பை எதிர்பார்க்கிறார். கடைசியில் நம் கிரியைகள் மட்டுமே நம் கூட வரும்.

2) வான லோக நற்செய்தியாளர் - தேவன் படைத்த பூமியும், வான மண்டலங்களிலுள்ள சந்திர சூரியன், நட்சத்திரங்கள், இயற்கை, எல்லா இயற்கை வளங்களும், பறவை, மிருக ஜீவன்களும் கூட தேவனின் மகத்துவத்தையும் மகிமையையும், புகழையும் அறிவிக்கின்றன. அவரது வல்லமை, அனந்த ஞானம், அறிவு, இரக்கம், தயை, அன்பு யாவற்றையும் தங்கள் கிரியைகளால் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நொடியும் தவறாது, அயராது அவருக்குள் கீழ்ப்படிந்து வாழ்ந்து

கொண்டிருக்கின்றன. சங்கீதம் 19 ஒன்றே இதற்கு சான்றாகும். படைப்பின் நோக்கத்தையும் சர்வ வல்ல தேவனை போற்றிப்புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதிக்கிறார்கள்.

அவரில் அன்பு கூருவதால் நாம் பெற்றுக்கொள்ளும் பெலனாலும், கிருபையினாலும் சமாதானத்தினாலும் மகிழ்ச்சியினாலும் அவர் வழிகளில் நடந்து அவருக்குப் பிரியமானதைச் செய்வோம். அவரிடத்திலிருந்து நற்சாட்சி பெற்று களிகூறுவோம். மனுஷர் புகழ் மேன்மையான சாட்சி அல்ல, தேவனிடமிருந்தே நற்சாட்சி பெறுவோம். அதுவே அவருடன் வாழும் நித்திய வாழ்வுக்கு அது வழி வகுக்கும்.

சந்திக்கும் ஒவ்வொருவரையும் பாாத்து புன்முறுவல் செய்து, கை குலுக்கி, இயேசு உன்னை நேசிக்கிறார் என்று சொன்னாலே போதும். நாம் சீக்கிரத்தில் ஒரு மிஷனரியாக மாறி ஊழியத்தில் வெற்றி பெறலாம். கடைப்பிடிப்போமா?...

## வேத வினா போட்டி – 44

**பதில் வசன எண், அதிகார எண்ணுடன் இருக்க வேண்டும்**

1. தேவனுடைய கிருபையை எப்படி பெறக்கூடாது?
2. ....... காலத்தில் நான் உனக்குச் செவிக்கொடுத்து.
3. .............. நாளிலே உனக்கு உதவிசெய்தேன்.
4. இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு எவ்விதத்தினாலேயும், எங்களை தேவஊழியக்காராக விளங்கப்பண்ணுகிறோம் என்று கூறினது யார்?
5. அழியும் கூடாரம் எது? அழியாத நித்திய வீடு யாரால் கட்டப்பட்டது?
6. யாரை காணாததினால் பவுலுக்கு அமைதலில்லாதிருந்தது
7. எவ்விதமான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது?
8. ராஜாவுக்கு நெகேமியாவின் ஸ்நானம் என்ன?
9. கல் மதில் எதினால் இடிக்கப்படும் என தொபியா கூறினான்?
10. ஏழைகளின் கூக்குரலைக் கேட்ட பிறகு நெகேமியா எதை நிறுத்தினான்?
11. தோராயமாக எருசலேமுக்கு செருபாபேலோடு திரும்பின ஜனங்கள் எவ்வளவு?
12. அர்தசஷ்டா ராஜா நெகேமியா பற்றி உணர்ந்து கொண்டது என்ன?
13. எந்த மிருகம் தன் வாலை கேதுரு மரத்தை போல நீட்டுகிறது?
14. எங்கிருந்து தேவன் யோபிடம் பேசினார்?
15. யோராம் யாரை மணந்தான்?
16. தேவன் ஐந்தாம் நாளில் எவற்றை உருவாக்கினார்?
17. ஆதாம் எத்தனை வருஷம் வாழ்ந்தான்?
18. வனாந்திரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தம் யார்?
19. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் ......... இருக்கும்?
20. எங்குயிருந்து நன்மை வரக் கூடுமா? என்று நாத்தான்வேல் கேட்டார்?
21. இயேசு கிறிஸ்து எந்த மரத்தின் கீழ் உன்னை கண்டேன் என்று யாரிடம் சொன்னார்?
22. எந்த குளத்தில் இயேசு கிறிஸ்து குருடனைக் கழுவச் சொன்னார்?
23. மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை எப்படி அழைக்கிறான்?
24. யார் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிறார்கள்?

# ஓரே இரவில் மாற்றங்கள்...



சகோதரி. ஜோஸ்பின் டேனியல்

அருமையானவர்களே! இரவை யாரும் விரும்புவதில்லை. ஏன் என்றால் இரவில் தான் பெலவீனத்தின் தாக்கம், பிரச்சனைகளின் தாக்கம், தூக்கமின்மை, கடலின் சீற்றம், பொல்லாதவர்களினால் உண்டாகும் தாக்கம், சாத்தானின் செயல் அதிகமாக இருக்கும். சோதனையும், பிரச்சனைகளும், வலிகள், சமாதானமற்ற நினைவுகள் இரவுகளில் தான் அதிகமாகிறது. தேவனுக்கு பிரியமற்ற காரியங்களும் இரவில் தான் நடைப்பெறுகிறது. தன்னுடைய பிரச்சனைகளினால் இரவில் தூங்காதவர்கள் அநேகர் உண்டு. சிலர் இரவு வராமலிருந்தால் நன்றாக இருக்கும் என்றும் நினைக்கிறார்கள்.

பிரியமானவர்களே! தேவன் நமக்காகவே இருளையும், வெளிச்சத்தையும் உண்டாக்கினார். நமது தேவனுக்கு இரவு மற்றும் பகல் என்றல்ல இருளுக்குள் நடப்பதும் வெளிச்சத்தில் தெரிவது போல தெரியும். நமது தேவனுக்கு மறைவானது ஒன்றுமேயில்லை. சிலர் இரவு வராமலிருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறுபவர்களும் உண்டு. இந்த செய்தியை வாசிக்கும் உங்களுடைய வாழ்க்கையில் இன்று இரவே ஒரு விடுதலையை தரும்படியாக காத்திருக்கிறார்.

ஒரு முறை இயேசுகிறிஸ்து இரவின் நாலாம் ஜாமத்தில் கடலின் மேல் நடந்து வந்தார். அதனை கண்ட சீஷர்கள் பயந்து அலறினார்கள். உடனே இயேசு திடன்கொள்ளுங்கள், நான்தான் பயப்படாதிருங்கள் என்றார் (மத் 14:25-27). நீங்கள் எதைக்குறித்து இரவில் கலங்கியிருக்கிறீர்கள்? இரவில் உண்டாகும் பயங்கரத்திற்கு பயப்படாதிருப்பாய் என்று 91 - ம் சங்கீதத்தில் சங்கீதக்காரன் குறிப்பிட்டுள்ளதை பார்க்கிறோம். உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை தாக்கி உங்களை பயப்பட வைக்கும் எந்த காரியங்களாயிருந்தாலும் அதனை இயேசுகிறிஸ்து சிலுவையில் ஜெயித்திருக்கிறார். நீங்கள் பயப்பட வேண்டாம், தேவன் உங்களுடன் இருக்கிறார்.

உலகின் பல நாடுகளில் தங்கள் தேசத்தின் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார்கள். நமது பாரத தேசத்தின் சுதந்திர தினம் ஆகஸ்ட் 15 - ம் தேதி ஆகும். தேசம் சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக ஒரு பெரிய போராட்டம் உண்டாகும். அதில் வெற்றி பெற்றவுடனே, சுதந்திர தினம் என்று பெருமிதத்துடன் சுதந்திர தினத்தை கொண்டாடுவார்கள். ஆனால், இங்கேயோ நாம் காண்பது சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக பஸ்கா கொண்டாடினார்கள். அந்த இரவு தான் ஒரு பெரிய அதிர்ச்சி சத்துருவுக்கு உண்டானது. என்ன பிரியமானவர்களே! இதனை எப்பொழுதாவது நினைத்திருக்கிறீர்களா? ஆம், விடுதலை பெறுவதற்கு முன் பண்டிகை கொண்டாடினார்கள். ஒரே இரவில் தேவன் சூழ்நிலைகளை தலைகீழாக மாற்றினார். நம்ப முடியாத காரியங்களில் மாற்றங்களை கொண்டு வருவது தான் தேவனுடைய செயலாகும்.

ஒவ்வொரு நாளும் விடுதலை கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று எத்தனை ஆண்டுகள் இஸ்ரவேல் ஜனங்கள் காத்திருந்திருப்பார்கள். ஒரே இரவில் நம்ப முடியாத விடுதலை. சத்துருவின் வீடுகளில் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல், நடு ராத்திரியில் மாற்றம் உண்டாயிற்று. உன்னை சத்துருவின் கையிலிருந்து விடுவிக்க அவர் வல்லவர். தேவனுடைய நேரம் வந்தது......எகிப்தின் நுகம் முறிக்கப்பட்டது. தம்முடைய ஜனங்களின் சத்துருக்களுக்குள் தீங்குசெய்யும் தூதர்களை அனுப்பினார். தம்முடைய ஜனங்களை ஆடுகளைப் போல புறப்படப்பண்ணி, அவர்களை வனாந்திரத்திலே மந்தையைப் போல கூட்டிக்கொண்டு போனார் எனறு சங்கீதம் 78:52-ல் பார்க்கிறோம். இன்று நீங்கள் எந்த நபருக்கு, எந்த சூழ்நிலைக்கு அடிமைப்பட்டு கலங்கி இதிலிருந்து என்னை விடுவிக்க யாரால் கூடும் என்று திகைத்து நிற்கிறீர்கள். இன்று இரவே உன்னை விடுதலைப்பண்ண தேவனால் கூடும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை. இன்று இரவே அதாவது நாளை

விடியும் போது அதனுடைய முழு விடுதலையும் உங்களுடையதே. நீங்கள் எதிர்பார்த்து காத்திருக்கும் காரியத்தில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்.

ஒருமுறை இயேசு கிறிஸ்துவின் சிலுவை பாடுகளின் படத்தை டிவியில் பார்த்தேன். அதிலுள்ள ஒரு காட்சி அடிக்கடி என் ஞாபகத்திற்கு வந்து போவது வழக்கம்; அது என்னவென்றால்: இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போது அவர் மரணப்பாடுகள் படும்போது... அவருக்கு அருகில் சிலர் நின்று அழுதுக்கொண்டிருப்பார்கள், சிலர் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருப்பார்கள், கூட்டத்தின் நடுவில் ஒரு சாத்தான் குட்டிச்சாத்தானை தன்னுடைய இடுப்பில் வைத்து தூக்கிக் கொண்டு செல்லும் அப்பொழுது அந்த குட்டிச்சாத்தான் இயேசு கிறிஸ்துவை நோக்கி கிண்டலாகவும்.. இயேசு கிறிஸ்துவுக்கு அத்தியாயம் இனி இல்லை என்ற அர்த்தம் உண்டாக்கும் வண்ணமாக திரும்பி பார்ப்பது போல இருக்கும். அத்தியாயம் முடிந்தது தான் ஆனால்... இயேசு கிறிஸ்துவினுடைய அத்தியாயம் அல்ல. சாத்தானுடைய அத்தியாயமே முடிந்தது. இன்னும் ஒரு இரவு சென்று மூன்றாம் நாள் விடியும் என்ற அத்தியாயத்தின் துவக்கத்தை அவனால் முகர முடியவில்லை. அவனுக்கு தெரிந்தவை எல்லாம் எல்லாருடைய பாவ, சாபங்களையும் சிலுவையில் இயேசு கிறிஸ்து சுமந்துக் கொண்டு தொங்கின போது.. பிதாவாகிய தேவன் இப்படியே இயேசு கிறிஸ்துவை கைவிட்டுவிட்டார் என்று நினைத்துக் கொண்டான்... ஆதலால் தான் அந்த நகைப்பான பார்வை. இயேசு கிறிஸ்துவினால், அவருடைய பரிசுத்த இரத்தத்தினாலும், அவருடைய மரணத்தினாலும், அவருடைய உயிர்த்தெழுதலினாலும் ஒரு பெரிய சுதந்திரம் உலகத்தில் உண்டாக போகிறதை அறியாமலிருந்தான்.

இதனை எழுதும் போது எனக்கு இன்னும் ஒரு உண்மை தோன்றுகிறது; அது என்னவென்றால் பிசாசிற்கு எல்லாம் தெரியும் என்று நாம் நினைக்கக்கூடாது காரணம் ஆதாம் ஏவாளுக்கு தேவன் கொடுத்த திட்டத்தை அவன் அறியவில்லை ஆதலால் தான் ஏவாளை பார்த்துக் கேட்டான்: தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்க கூடாது என்று கர்த்தர் சொன்னாரா? என்று தந்திரமாக கேள்வியை கேட்டு அதிலுள்ள இரகசியங்களை ஏவாளிடம் இருந்து பெற்றான். ஆதலால் நாம் எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டும். நான் யோசிக்கிறேன் இயேசுகிறிஸ்துவின் பாடுகளினாலும், அவருடைய உயிர்த்தெழுதலினாலும் நமக்கு விடுதலை உண்டு என்று சாத்தான் அறிந்திருந்தால் இயேசு கிறிஸ்துவை சிலுவைக்கு செல்லவிட்டுக் கொடுத்திருக்கமாட்டான்.

இரவு விடிந்து அதிகாலையில் அவரை காணும்படியாக பெண்கள் சென்றார்கள். அவர்கள் போகும் போது, கல்லறையின் வாசலிலுள்ள கல்லை யார் நமக்காக தள்ளுவார்கள் என்று பேசிக்கொண்டார்கள். அவர்கள் கண்ட காட்சி கல் தள்ளப்பட்டிருந்ததைக் கண்டார்கள்..... இரவு முடிந்து அதிகாலையில் தான் இந்த காட்சியை மகதலேனாவும், மரியாளும் கண்டார்கள். தள்ள முடியாத கல் தள்ளப்பட்டு இருந்தது. பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்து நமக்காக தான் எல்லாவற்றையும் சிலுவையில் முடித்தார். இன்றும் அவருடைய கல்லறை காலியாக தான் இருக்கிறது. சாத்தானின் நகைப்பான பார்வையுடன் சேர்ந்து அவனுடைய தலையும் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் நசுக்கப்பட்டது. ஆம், இயேசு கிறிஸ்து நமக்காகவே பிசாசின் தலையை நசுக்கினார். நமக்கு சமாதானத்தை உண்டுப்பண்ணும் ஆக்கினையை அவர் ஏற்றுக்கொண்டார். உங்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட கற்களாயிருந்தாலும், அதனைக் கண்டு பலர் நகைக்கலாம் ஆனால் அது முடிவல்ல. இதோ இன்று இரவு முடிந்து விடியும் போது உங்களுடைய வாழ்க்கையிலுள்ள அனைத்து இருளான காரியங்களும் மாற்றப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். மூடப்பட்ட நிலையில் உள்ள எந்த தடைக்கற்களாய் இருந்தாலும் தள்ளப்பட்டிருப்பதை காண்பீர்கள்.

இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பிறகு இயேசு கிறிஸ்துவின் சீஷரான சீமோன் பேதுரு மீன் பிடிக்க நான் போகிறேன் என்றான் அதற்கு அவனுடன் இருந்த இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் சிலர் நாங்களும் வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் மீன் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற் காலமானபோது, இயேசு கரையிலே நின்றார். அவரை இயேசு என்று அறியாதிருந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி பிள்ளைகளே! புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு திறளான மீன்கள் அகப்பட்டதினால் அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்.

சீமோன் பேதுரு 153 பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்; இத்தனை

பெரிய மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இராத்திரி முழுவதும் முயற்சித்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. இன்று உங்களுடைய பிரயாசங்களில் வெறுமையும், தோல்வியும்தான் உண்டாகிறதா? உங்கள் வெறுமையை நிறைவாக்க தேவனால் கூடும். இந்த இரவு முடிந்து பொழுது விடியும் போது நீங்கள் அதனை காண்பீர்கள். ஆம், விடியற் காலையில் ஒரு மாற்றத்தைக் காண்பீர்கள்.

ஒரு குறி சொல்லும் பெண் பவுலும், சீலாவும் எங்கேயெல்லாம் செல்கிறார்களோ, அங்கே சென்று அவர்களை இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிடுவாள். இப்படி அநேக நாள் செய்து கொண்டு வந்தாள். பவுல் சினங்கொண்டு திரும்பிப் பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னார். அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, பவுலையும், சீலாவையும் பிடித்து சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள். அவர்களை அதிகாரிடத்தில் ஒப்புவித்து யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள். அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப் போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி, அவர்களை அநேக அடி அடித்த பின்பு சிறைச்சாயில் வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் கட்டளைப்பெற்றதினால் அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்தான். நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது: உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது: எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று. சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து. சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலை செய்து கொள்ளப்போனான். பவுல் மிகுந்த சத்திமிட்டு : நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ்செய்து கொள்ளாதே: நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். அப்பொழுது அவன் நடுநடுங்கி பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து. அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவமாரே இரட்சிக்கப்படுகிறதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்றார். மேலும் இராத்தியில் அந்நேரத்திலே தானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும், அவனோடிருந்தவர்களும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

பவுல், சீலாவின் கட்டுகள் இராத்திரியில் தான் அறுப்பட்டது... அவர்கள் சரீர பிரகாரமான கட்டுகளிலிருந்து விடுதலைப் பெற்றார்கள். காவலாளர்களோ ஆவிக்குரிய கட்டுகளிலிருந்து விடுதலைப்பெற்றார்கள். சிறைச்சாலைக்காரன் இவர்களுக்கு நடந்தவைகளைக் கண்டு தேவனை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று பார்த்தோம்.

பிரியமானவர்களே! பவுலும், சீலாவும் பிரச்சனையை கண்டு சோர்ந்து போகவில்லை... அவர்கள் துதிக்கவும் மறக்கவில்லை... அந்த இரவே விடுதலை, ஆம், நீங்கள் எவ்விதமான கட்டுகளில் இருந்தாலும் தேவன் உங்களை இந்த இரவே விடுதலையாக்க முடியும்.... துதியுங்கள்... துதியுங்கள்..... உங்களோடு யார் இருந்தாலும் அவர்களுடைய கட்டுகளும் அறுப்படும்.

பிரியமானவர்களே! எவ்விதமான காரிருளாயிருந்தாலும் தேவன் அந்த இரவையும், காரிருளையும் மாற்றி அங்கு தன்னுடைய வெளிச்சத்தை அனுப்பி உங்களை பிரகாசிக்க செய்ய வல்லவர். நீங்கள் எவ்விதமான மனஅழுத்தத்துடன் கடந்து சென்றாலும் அவரால் எல்லா நிலைகளையும் மாற்ற முடியும் என்று விசுவாசியுங்கள்.

இன்று இரவு கடந்து நாளை பொழுது விடியும் போது நீங்கள் எந்த காரியங்களில் மாற்றங்கள் வரும் என்று ஏக்கத்துடன் அநேக நாட்களாய் காத்திருக்கிறீர்களோ அல்லது மாற்றங்களே வராதது என்று நினைக்கும் கடினமான சூழ்நிலைகளாயிருந்தாலும் அவரால் மாற்ற முடியும்.

நீங்கள் சொப்பனம் காண்பது போல உங்களுடைய வாழ்க்கையில் தேவன் மாற்றங்களை கொண்டு வருவார். ஆம் இந்த இரவே மாற்றங்கள்! சத்தமாக ஒரு ஆமென் சொல்வோமா!ஆமென்.

# பணித்தளச் செய்திகள்........



## துதியுங்கள் :

1. வேதாகமம் கொடுக்க தேவன் உதவுச் செய்ததற்காக.
2. ரூப்தாஸ், லதா, மோஹான், ஜெகதீஸ், சீவ்கால், ரவிராஜ், லிந்தா, ஷகர், பங்கஜ், சம்ரோ, சோனல், சிம்மோன், விவேக், சுனில், பிரதீப், சுமன்சீ, மாபாராம்,ரத்தூனு, ஜித்தேந்த்ர், விசுவாஷ், கங்காராம், சுக்கீலால், ஆசீஷ், சோட்டி, பானு, கோபால், ராஜேஷ், தீனேஸ், மனோஹர், சீயாம், மன்ஷம், கோசி, கேத்தூள், ஷஆதிரி, சோனு, தூகால், அனித்தா, ஜெகநாத், திலிப், சுரேஷ், தூவாசீ, சோபா, மால்தீ, பேலாத், ராம்பாய், சந்தூருகலி, ராஜீ, அஜேய், கிளாபத், கங்காவதி, தீஜன்பாய், சிவகாரி, சிவகுமார், ராமாசிங், பன்ஜேவ், ராதா, ரமீஹா - புதியதாக ஜெபக்குடுகைக்கு வந்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து தேவனுக்குள் நிலைத்து நிற்க.
3. சப்மாஸ் - மனநிலை பாதிப்பிலிருந்து விடுதலை கிடைக்க.
4. என்கேடா கிராமத்தில் ஜெபக்கூட்டம் தொடங்க தேவன் கிருபைத் தந்துள்ளார்.
5. பைய்சாஜூ, மாலதி, சந்தோஷி, பாக்வதி, ரஜினி, மனோஹார், தேவ்சிங், த்தேவ்ஜீ, ராஜ்பனி, சுனித்தா, கிளாவத்தி, சோம்நாத், ஜாமுள், ராத்பால, கலி, உல்சீ, ஜம்பா, உலாவத்தி, ராதா - இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தேவன் கிருபைப்பாராட்டினார்.
6. நாராயன் - வயிற்றுவலியிலிருந்து சுகம் பெற்றுக் கொண்டார்.
7. சுக்வாரீயா - இடுப்பு வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக.
8. ராதாபாய் - இருதய, வயிறுவலியிலிருந்து சுகம் பெற்றுக்கொண்டார்.
9. ரஜன்தீபாய் - அசுத்தாவியிலிருந்து விடுதலைப் பெற்றதற்காக.
10. கடந்த மாதங்களில் தடையின்றி சிறுவர்களுக்கு விடுமுறை வேதாகப்பள்ளி நடத்த தேவன் கிருபைப் பாராட்டினார்.
11. கடந்த ஆறு மாதங்களில் ஊழியங்களின் சகல தேவைகளையும் தேவன் தம்முடைய பண்டகசாலையிலிருந்து சந்தித்ததற்காக.
12. ஊழிய பிரயாணத்தில் தேவன் தந்த பாதுகாப்பிற்காக.



## ஜெபக்குறிப்புகள் :

1. *என் கேடா, இவர் கடேயே - கிராமத்தின் விசுவாசிகள் கர்த்தருக்குள் வளர்ச்சியடைய*
2. *கோர் காவ்ங், மேவு கிராமத்தில் தேவாலயம் கட்டப்பட ஜெபியுங்கள்.*
3. *பணித்தளங்களில் 81- நபர்கள் புதியதாக ஜெபக்கூட்டத்திற்கு வருகிறதற்காக.*
4. *சமத்தரிபாய், கேந்தூள், தூகால், சேஹதிரி, தீஜன், பன்ஜம், சோனு, கோசி, நவல், சோனா, பிரதீப், மாபாராம், ராஜேஷ், கங்காராம், சோட்டிபாய், பாஜன், கங்காவத்தி, சமர்சிங், சம்லோபாய் - ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக காணப்படும் இவர்கள் தடையின்றி ஞானம் பெற.*
5. *கரே காவ்ங் - குடி நீர் இக்கிராமத்தில் கிடைப்பதில்லை, போர் அவசியமாக காணப்படுகிறது. சீக்கிரமாக போர் போட தேவன் கிருபைப் பாராட்ட.*
6. *சாதனாவிற்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்க.*
7. *முஸ்கான், மோகித், சுலைமான், அமர்ஜித், ஆஷிஸ், அபிஷேக், சோன்பால், சோனம், ஷீர்தா, ஷமீர், அனுப்பம், ஜிக்கியாஷா, நவீன், சுவாதி, ஷீலாஸ், ஷாக்ஷி - இவர்கள் இயேசுவை*

தன்னுடைய சொந்த ரட்சகராக ஏற்றுக் கொள்ள.

8. வட இந்தியாவில் ஊழியத்தின் எல்லைகள் விரிவடைய ஜெபியுங்கள்

9. அருட்பணியாளர்களுடைய அனைத்து தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

10. எழுத்து ஊழியத்தின் சகல தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

11. VBS நிகழ்ச்சியில் பங்கு எடுத்த பிள்ளைகளுக்குள் மாற்றங்கள் வர, பிள்ளைகள் கற்றுக் கொண்டவைகளில் நிலைத்து நிற்க.

12. தயா ஊழியத்துடன் இணைந்த ஜெப பங்காளர்கள், வாசகர்கள், உதவியாளர்கள், பத்திரிக்கைக்குழு அங்கத்தினர்கள் மற்றும் ஊழியத்தில் எங்களுடன் உறுதுணையாக இருப்பவர்கள் - இவர்களின் சுகத்திற்காக, தேவைகள் சந்திக்கப்பட.

13. மோகனா, கபிளா, சுலைமான் - வேலை கிடைக்க, ஷியாம், அபி - திருமணம் நடைப்பெற, சந்திரா, சுசிலா, லிதிகா - முழுமையான விடுதலைக்காக, பொன்தி - குழந்தை பாக்கியம்.

14. பணித்தளங்களிலுள்ள தலைவர்கள் தேவனை ஏற்றுக் கொள்ள.

15. ஊழியங்களின் அனைத்து தேவைகள் சந்திக்கப்பட.

16. புதிய அருட்பணியாளர்கள் நம்முடன் இணைய, அவர்களை தங்கள் பொருளாதாரத்தினால் மற்றும் ஜெபத்தினால் தாங்கக் கூடியவர்கள் எழும்ப.

17. திறந்த வாசல் இந்தியா முழுவதும் கிடைக்க. நாங்கள் செல்கிற இடங்களில் ஆரோக்கியமான வசனங்களை போதிக்க, ஜனங்களை தேவனுடைய சித்தத்திற்கு நேராக வழி நடத்த.

18. எங்களுடைய ஊழிய பிரயாணங்களில் தேவனுடைய பாதுகாப்பும், வழி நடத்துதலும் கிடைக்க. எப்பொழுதும் சுகத்துடன் தேவ பெலத்துடனும், தேவனிடத்திலிருந்து கிருபையைப் பெற்று ஊழியங்களை செய்ய

19. மீட்டாய் - பரிசுத்த வாழ்க்கை மற்றும் எதிர்க்காலத்தில் இன்னும் முன்னேறிச் செல்ல.

20. அமுதாவின் கணவன் - மனைவி பிள்ளையுடன் இணைந்து வாழ, கவிதா - தடைகள் நீங்கி கணவன் பிள்ளைகளுடன் இணைந்து வாழ, சங்கீதாவின் கணவன் பிள்ளைகள் மற்றும் சங்கீதாவிற்கு விரோதமாக செயல்பட்டாமல், குடும்பத்தை நேசித்து, தேவனுக்கு பிரியமான குடும்பத்தை நடத்த தடையாக இருக்கும் அனைத்து காரியங்களும் விலக.

21. கட்டடப்பபணியின் தேவைகள் சந்திக்கப்பட.

22. ஜெயசிங் - நாக்கிலுள்ள புண் குணமாக.

## Our Bank Details

**Dhaya Ministries & Charitable Trust**

**State Bank of India (SBI)**
A/c.No.30916103538
IFS Code SBIN 0001515,
Branch - Purasawalkam, Chennai (T.N.)

**Or**

**Union Bank of India (UBI)**
A/c.No.527102010312844
IFS Code UBIN0552712
Branch - St. Joseph, Bhopal (M.P.)

## ஜெபக்குறிப்புகள்

1. மழையினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் சந்திக்கப்பட.
2. வியாதியுள்ளவர்கள், சாத்தானின் பிடியிலிருப்பவர்கள் - விடுதலைப் பெற்று ஆவி, ஆத்துமா, சரீரத்தில் சுகம் பெற.
3. காவலர்களின் பாதுகாப்பு இரட்சிப்பு, அவர்களுடைய பணிகளை நேர்மையாக செய்ய தேவன் கிருபைப்பாராட்ட.
4. இளவாலிபர், வாலிபர்கள் - இந்த வயதில் வரும் இச்சைகளுக்கு விலகி, பரிசுத்தமாய் வாழ, அவர்களின் பாதுகாப்பிற்காகவும்.
5. மத்தியபிரதேஷ், மஹாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடாக, பிஹார், அசாம் - இந்த மாநிலங்களில் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய, இயற்கை சீற்றத்தின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட
6. முப்படை வீரர்களின் பாதுகாப்பு, சுகத்திற்காக, வளர்ச்சிக்காக, இரட்சிப்பையும் பெற.
7. சீனா, சவுதி அரபியா, மலேசியா, வடகொரியா, சோமலியா - இந்த நாடுகளுக்குள் சுவிசேஷம் பரவ.

## "தயா ஊழியங்கள்"

- அருட்பணியாளர் அனுப்புதல்
- உபவாச ஜெபக்கூட்டங்கள்
- சுவிசேஷ கூட்டங்கள்
- எழுப்புதல் கூட்டங்கள்
- குருகுலம்
- வேதபாட ஊழியங்கள்
- சிறுவர் ஊழியங்கள்
- வாலிபர் ஊழியங்கள்
- பத்திரிகைகள்
- ஊழியர் புத்துணர்ச்சி ஊழியம்
- குடும்ப ஆலோசனைகள்
- ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி
- ஏழைகள் கைவினைப் பயிற்சி
- சுகாதாரம் மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகள்

**Printed Matter**

To

Return Requested to:
**Post Box No. 01**
**Dhaya Ministries**
Address : T8/510, Sagar lake view
Homes, Ayodhya Bye pass Road, Piplani
Post , Bhopal (M.P.) 462022

"கர்த்தர் என்னை கேட்டருளி விசாலத்திலே வைத்தார்" - சங் 118:5.